**மாண்புமிகு மத்திய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் நடந்த தேசிய மற்றும் கிராம பொருட்கள் ஆணை வாரியத்தின், டெல்லியில் 16.7.2008 அன்று நடைபெற்ற 3–வது கூட்டத்தில் மாண்புமிகு கதர் வாரிய துறை அமைச்சர் அவர்கள் பேசிய விவரம்.**

* * * * * *

கதர் என்பது எளிமைக்கான குறியீடு, இதற்கென நம் நாட்டுடன் இணைந்த ஒரு தனி வரலாறு உள்ளது. சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்களின் ஆதரவு பெற்றிருந்த கதர் துறை தற்போது மெள்ள மெள்ள ஆதரவினை இழந்து வருகிறது. அதற்கு முக்கிய காரணம் வளர்ந்து வரும் துணி வகைகள் தான். இதனால், வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களால் ஆளுமைப்படுத்தப்பட்டுள்ள கதர் வாரியம் தனது உயரிய ஸ்தானத்தை மெள்ள மெள்ள இழந்து போனது. மனித சமூக சமத்துவம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அனைத்து வழிவகைகளையும் செய்து வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கதர் வாரியம் வறுமைக்கோட்டில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது. மத்திய அரசும் சூலூர் கிளஸ்டர் (ஸ்ருதி திட்டம்) கதர் வாரியத்தின் மூலம் செயல்பட ஆவண செய்துள்ளது. கதர் வாரியத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கதர் துறையின் மேம்பாட்டிற்காக கூட்டப்பட்டுள்ள இக்கூட்டத்தில் கதர் துறையின் நலனிற்காக தனது கருத்துக்களை மாண்புமிகு கதர் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

(1) கதர் துறையில், நூற்பாளர்களில் பெரும்பாலோர் 50 வயதிற்கு மேற்பட்ட பெண்களே. அவர்கள் வாங்கும் கூலி மிகவும் குறைவாகவும், பற்றாக்குறையாகவும் உள்ளதால், ஒவ்வொரு மாநிலரத்திலும் (NREGP) தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு கூலியை இவர்களுக்கும் செயல்முறைப்படுத்தினால், அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர வாய்ப்புள்ளது.

(2) கதர் ஆணைக் குழுமம் ஜன ஸ்ரீ பீம யோஜனா என்ற பெயரில் பொதுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தி வருகிறது. கைத்தறி துறையில், நூற்பாளிகள் மற்றும் நெசவாளர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டம் செயல்படுத்துவது போல் **(LOMDARD)** போல் கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கும் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

(3) கதராணைக்குழு தற்போது அமுல்படுத்தியுள்ள **PRODIP** திட்டத்தின் மூலம் பலவகை டிசைன்களினான ரெடிமேட் வகைகள் தரம் மற்றும் வகைகள் மேம்பட வாய்ப்பு உள்ளது மற்றும் டெக்ஸ்டைல் எக்ஸ்பார்ட்ஸ் உதவியுடன் மேலும் கதர் வாரியத்தின் வளர்ச்சிக்கு உதவிட இயலும் என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் கதர் வாரியத்தை பொருத்தவரை உள்ள பிரச்சினைகளையும், அதனை நிவர்த்திக்க கதராணைக் குழுவிடம் எதிர்பார்க்கும் உதவிகளை பற்றியும் மாண்புமிகு கதர் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாட்டில் ஸ்லைவர்களுக்கான கிடங்கு இல்லாத காரணத்தால், தமிழ்நாடு கதர் வாரியமானது பக்கத்து மாநிலங்களையே தனது ஸ்லைவர்கள் தேவைக்கு நம்ப வேண்டிய நிலை உள்ளது. இதனால் போக்குவரத்து செலவினம் அதிகமாவதுடன், தேவைக்கு ஸ்லைவர்கள் கிடைக்காமல் உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்படுவதால், தமிழ்நாட்டிலேயே ஒரு சேமிப்பு நிலையம் (கிடங்கு) தொடங்கி, மான்யம், வழங்கவும் ஆவண செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கியமான தொழில்களில் தேனீ வளர்ப்பு தொழிலும் ஒன்று. தமிழ்நாடு கதர் வாரியமானது கன்னியாகுமரி மாவட்டதிலுள்ள மார்த்தாண்டம் பகுதிக்காக, ஏற்கனவே, ஸ்ருதி திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பிற்கான எடுத்துரை அனுப்பப்பட்டு உள்ளது. நிலுவையில் நீண்ட காலமாக உள்ள கோரிக்கைக்கு ஒப்புதல் வழங்குவதன் மூலம் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க இயலும் என்று தெரிவித்தார்.

பனைத்தொழில் முன்னேற்றத்திற்காகவே, தமிழக அரசால் பனை வாரியம் என தனியே ஒரு வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிக அளவில் பனைமரங்கள் உள்ளது. அரசு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டுள்ள போதும், இத்துறையானது நலிவடைந்த நிலையிலேயே உள்ளதுடன், இதன் மீட்புக்காக கதராணைக்குழுவிடம் இருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுவதால், ஆணையகமானது பனைத்தொழிலுக்கு புத்துணர்ச்சி அளிக்க சிறப்பாக கருதி, இத்துறைக்கு நிதியுதவி வழங்குவதுடன், ரயில்வே துறையில் பனைப் பொருட்களான நீரா, பாம் சாக்லேட், பனங்கற்கண்டு போன்றவைகளை ரயில்வே ஸ்டேஷன்களில் விற்பனை செய்வதற்கும் ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

நட்டத்தில் இயங்கி வரும், கதர் துறையினை முன்னேற்றிட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழக அரசும், அரசுத் துறைகளுக்கு தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்கு கதர் துறையிடம் கொள்முதல் செய்வதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, பொருள் வழங்குவதற்கு முன்னுரிமை அடிப்படையில் (Purchase preference) கொடுக்கப்பட்டுள்ள போதிலும், கதர் வாரியத்திற்கு மூலதன பணம் (Working Capital) தேவைப்படுவதால் கதராணைக் குழுமம் இதனை கனிவுடன் பரிசீலித்து நிதியுதவி அளிப்பதன் மூலம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்த செய்யலாம் என்று தெரிவித்தார்.

ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதராணைக் குழுவானது 1995 வரை கடன் வழங்கியுள்ளது. கடன் பெற்றவர்கள் அனைவரும், மிக மிக ஏழ்மையான நிலையில் உள்ள மக்கள், அவர்களால் கடனை மீள செலுத்த இயலாததன் காரணத்தால், தொகை வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அக்கடன் தொகையை ரத்து செய்திடும்படி கேட்டுக் கொண்டார்.

தனது கருத்துக்களையும், தனது வேண்டுகோளையும் கனிவுடன் பரிசீலித்து நலிவடைந்த, நிலையில் உள்ள கதர் துறையினை மேம்படுத்துவதற்கு, கதராணைக் குழுவானது பேருதவி நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு கதர் வாரியத்துறை அமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்து தனது உரையை முடித்தார்.